09.02.2026

அ.வ.எண். 126/2019

வா.சா.1 – திரு. நிமலன் கிறிஸ்டோபர், (வட்ட சார் ஆய்வாளர்), த/பெ.ஜார்ஜ் மனோகரன்,

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 09.02.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>1 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. IA 3/2020 ல் நீதிமன்ற ஆணையரின் அறிவுறுத்தலின் பேரில் தான் சொத்துக்களை அளவீடு செய்தேன் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள வரைபடம் நான் கொடுத்தது தான். சர்வே எண்.153 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஏக்கர் 16.71 சென்ட் ஆகும். மொத்த அளவீட்டை நான் சரிபார்த்தேனா என்றால் விஸ்தீரணம் முழுவதையும் சரிபார்க்கவில்லை, சர்வே எண்.153 ன் சர்வே எல்லைகளை சரிபார்த்தேன். என்னுடைய வரைபடத்தில் சர்வே கல் உள்ளதை, வரைபடத்தில் சிறிய பெட்டி மூலம் குறிப்பிட்டு காட்டியுள்ளேன்.

2. என்னுடைய ஆவணத்தின்படி சர்வே எல்லைகள் சரியாக இருந்தது. மனுதாரர் கொடுத்த மனுவின் பெயரில் வழக்கு சொத்தை அளந்த அனுபவம் உள்ளது என்றால் நான் உள்வட்ட அளவராக இருந்த போது அளந்துள்ளேன். நான் ஏற்கனவே அளந்த அளவுகளுக்கு ஏதும் மாற்றம் இல்லை என்றால் நினைவில்லை. வரைபடத்தில் வடபுறம் கிழபுறமாக குறிப்பிட்டுள்ள காலியிடம் நெடுஞ்சாலைத்துறையால் நில ஆர்ஜீதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நெடுஞ்சாலைத்துறையால் எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதற்கு ஆவணம் உள்ளது என்றும், அதன்படி தான் வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது சம்பந்தமாக இருதரப்பினருக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் நெடுஞ்சாலைத்துறைக்கு தான் தெரியும். நெடுஞ்சாலைத்துறையால் எவ்வளவு நிலம் ஆர்ஜீதம் செய்யப்பட்டது என்பது சம்பந்தமாக எங்கள் துறையில் ஆவணம் உள்ளது என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ.3, 1வது வரைபடத்தில், நீல நிறத்திற்கு மேல்புறமாக இளஞ்சிவப்பு நிறத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அது க.ச.எண்.156 நம்பர் காலைக்கு உரியது என்றால் சரிதான். நான் சொத்தை அளவீடு செய்யும்போது, இளஞ்சிவப்பு நிறத்தை ஒட்டி மேல்புறமாக வேலி இருந்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நீல நிறத்திற்கு மேல்புற பகுதியில் இருந்து அளவீடு செய்து, கிழபுறத்தில் எதிர்மனுதாரர் / வாதி இடத்தில் ஆக்கிரமிப்பு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி வரைபடத்தில், மஞ்சள் நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது ஆக்கிரமிப்பு பகுதி என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு பகுதி தென்வடலாக 23 சென்ட் உள்ளது. எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் பக்கத்தில் உள்ள சர்வே கல்லில் இருந்து சொத்தை அளக்க வேண்டி குறிப்பாணை வழங்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் சொன்னார். அனுபவப்படி ஒரு வரைபடமும், பத்திரத்தின் அளவுகளின் படி ஒரு வரைபடமும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் எல்லைக்கற்கள் இல்லை என்றால் பொதுவாக பக்கத்தில் உள்ள சொத்துக்களில் எல்லையிலிருந்து அளவீடு செய்து தாவா சொத்தின் எல்லையை நிர்ணயம் செய்வோம் என்றால் சரிதான்.

5. இந்த வழக்கில் தாவா சொத்தில் சர்வே கற்கள் இல்லாததால் மேல்புற பூமியில் உள்ள சர்வே கற்களை கொண்டு தாவா சொத்தின் எல்லையை நிர்ணயம் செய்தோம் என்றால் சர்வே எண்.153 ல் வடமேற்கு மூலையில் சர்வே கல் இல்லை, ஆனால் சர்வே எண்.153 ன் தென்கிழக்கு மூலையில் சர்வே கல் இருந்தது, அந்த சர்வே கல்லை கொண்டு அளவீடு செய்தபோது அளவு சரியாக இருந்தது. நீதிமன்ற ஆணையர் மேல்புறம் உள்ள சர்வே கல்லில் சரிபார்த்து கொள்ளலாம் என சொன்னார். அதன்படி மேல்புறம் உள்ள சர்வே கல்லை வைத்து சரிபார்க்கும்போது சர்வே கல் இல்லை.

6. தாவா சொத்தை அளவீடு செய்யும்போது புகைப்படம் மற்றும் வீடியோ பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் / வாதி தரப்பு ஆவணப்படி சரியாக இருந்தது என்றும், அவர் மனுதாரர் / பிரதிவாதியின் கிழபுற சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் சரிதான்.

**<u>2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2, 3 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்குவிசாரணை ஏதும் இல்லை என்று தெரிவித்தார்.

**<u>மறுவிசாரணை</u>**

1. ஆக்கிரமிப்பு குறித்து எப்போது தெரியவந்தது என்றால் நீதிமன்ற ஆணையர் மூலமாக நில அளவை செய்தபோது தெரியும். ஆக்கிரமிப்பு குறித்து நான் அனுமானத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur